**மே – 07**


# தேசியச் செய்திகள்

## மின் வர்த்தகம் மீதான தேசிய கொள்கைக்கான கட்டமைப்பு

- வர்த்தகப் போட்டிகள் (competition), ஒழுங்குமுறைப்படுத்துதல் (regulation), தரவுகளின் பாதுகாப்பு, வரிவிதிப்பு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் போன்ற தொழில்நுட்ப அம்சங்கள் உட்பட பல்வேறு பிரச்சினைகளைக் களைய மின் வர்த்தகம் மீதான தேசிய கொள்கைக்கான கட்டமைப்பை (Framework for a national policy on e-commerce) இந்தியா வெளியிட உள்ளது.
- மின் வர்த்தக துறைக்கான (e-commerce sector) கொள்கைகளின் வரையறைகளை (contours) இறுதி செய்ய ஓர் செயற் பணிப் படையை (task force) அமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- மின் வர்த்தகம் மீதான தேசிய கொள்கைக்கான கட்டமைப்பு மீதான சிந்தனைக் குழுவின் முதல் சந்திப்பின் போது செயற் பணிப்படை அமைப்பு அமைக்க முடிவு மேற்கொள்ளப்பட்டது.
- இந்த முதல் சிந்தனைக் குழுவின் சந்திப்பிற்கு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை (Ministry of Commerce and Industry) அமைச்சர் சுரேஷ் பிரபு தலைமை தாங்கினார்.

## வருணா கடற்படை கூட்டுப் போர் பயிற்சி

- ரீயூனியன் தீவுப் பகுதியில் (Reunion Island) இந்தியா மற்றும் பிரெஞ்ச் கடற்படைகளானது வருணா கடற்படை கூட்டுப்போர் பயிற்சியின் மூன்றாவது மற்றும் கடைசி கட்டத்தை நடத்தியுள்ளன.
- இந்தியா மற்றும் பிரான்சிற்கு இடையேயான இருதரப்பு கடற்படை கூட்டுப் போர் பயிற்சியே வருணா (Varuna) ஆகும்.



- ரீயூனியன் தீவானது இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஓர் பிரெஞ்சு நிர்வகிப்பு நிலப் பகுதியாகும் (French administrative territory).
- 2018 – ஆம் ஆண்டிற்கான வருணா கூட்டுப்போர் பயிற்சியானது மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டுள்ளது. இம்மூன்று கட்டங்கள் அரபிக்கடல், வங்கக்கடல், தென்மேற்கு இந்தியப் பெருங்கடல் என மூன்று கடற்பகுதியில் நடத்தப்பட்டுள்ளன.
- 1993-ஆம் ஆண்டிலிருந்து வருணா எனும் இந்த இருதரப்பு கடற்சார் கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது.
- இந்தியா மற்றும் பிரெஞ்ச் நாட்டிற்கிடையேயான இருதரப்பு கூட்டுப் பயிற்சியானது 2001 ஆம் ஆண்டிலிருந்து வருணா எனப் பெயரிடப்பட்டு அழைக்கப்படுகின்றது.
- இதுவரை வருணா கூட்டுப் பயிற்சியில் 15 பதிப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

### இந்தியாவின் முதல் பெண் தீயணைப்பு வீரர்


- கொல்கத்தாவைச் சேர்ந்த தானியா சன்யால் (Taniya Sanyal) இந்தியாவின் முதல் பெண் தீயணைப்புப் படை வீராங்கனையாக (Woman Firefighter) உருவாகியுள்ளார்.
- இந்திய விமான நிலைய ஆணையத்தில் இவர் முதல் பெண் தீயணைப்பு (Airport's Authority of India-AAI) வீராங்கனையாக உருவாகியுள்ளார்.
- இவர் தீயணைப்பு சேவைத் துறையில் துணைநிலை உதவியாளராக (Junior Assistant) பணிபுரிய உள்ளார்.



## சர்வதேசச் செய்திகள்

### உலகின் முன்னணி ஐந்து பாதுகாப்பு செலவீட்டாளர்கள்

- ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (International Peace Research Institute-SIPRI) ஆனது உலகில் தங்களின் பாதுகாப்புக்கென அதிகம் செலவிடும் நாடுகளின் பட்டியலைக் கொண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது.




- 2017-ஆம் ஆண்டு இராணுவத்திற்கு அதிகம் செலவு செய்த உலகின் முதல் ஐந்து இராணுவ செலவீட்டாளர்கள் குழுவில் (world's five biggest military spenders) இந்தியா இணைந்துள்ளது.
- சீனா மற்றும் பாகிஸ்தான் உடனான பதற்றத்தினைத் தொடர்ந்து இந்திய அரசானது தன்னுடைய ஆயுதப் படைகளின் செயல்பாட்டுத் திறன்களை (operational capability) மேம்படுத்தியுள்ளது.
- 2017-ஆண்டு தன்னுடைய இராணுவத் துறைக்கு அதிகளவில் செலவு செய்த நாடுகளுள் அமெரிக்கா, சீனா, சவுதி அரேபியா, இரஷ்யா ஆகியவற்றைத் தொடர்ந்து இந்தியா 5-வது இடத்தில் உள்ளது.

## ஆறாவது இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கு

- ஈரான் நாட்டின் தலைநகரான டெஹ்ரானில் (Iranian) ஏப்ரல் 22-ஆம் தேதி முதல் 25-ஆம் தேதி வரை ஆறாவது இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கு (Indian Ocean Naval Symposium-IONS) நடைபெற்றுள்ளது.
- இந்தக் கருத்தரங்கில் இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கின் உறுப்பு நாடுகளும், காஸ்பியன் கடலின் கரையோர நாடுகள் (Caspian Sea littoral states) போன்ற பிற சில கடற்கரையோர நாடுகளும் பங்குபெற்றன.
- இந்த சர்வதேச கருத்தரங்கு நிகழ்வில், இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கின் தலைவராக ஈரானிய கடற்படை இரண்டு ஆண்டுக் காலத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டது.
- இந்தியப் பெருங்கடல் கடற்படை கருத்தரங்கானது பிராந்திய அளவில் தொடர்புடைய கடல்சார் பிரச்சினைகளின் விவாதிப்பிற்கு ஓர் திறந்த மற்றும் உள்ளடக்கு மன்றத்தை வழங்குவதன் மூலம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் (littoral states of the Indian Ocean Region) கடற்கரையோர நாடுகளின் கடற்படைகள் இடையே கடல்சார் ஒத்துழைப்பினை (maritime co-operation) அதிகரிக்க முனையும் ஓர் தன்னார்வ முயற்சியாகும் (voluntary initiative).

## பெண் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சந்திப்பு

- கனடா நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சரான கிறிஸ்டியா ப்ரீலாண்டு (Chrystia Freeland) கனடா மற்றும் ஐரோப்பிய யூனியன் (European Union) ஆகியவை கூட்டிணைந்து 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலகின் முதல் பெண் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பை (world's first female foreign ministers' meeting) நடத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.
- இந்தப் பெண் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பின் கூடுகைக்கு 30 நாடுகளைச் சேர்ந்த பெண் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் அழைக்கப்படுவர் என கனடா அரசு தெரிவித்துள்ளது.
- பெண்களுக்கான அதிகாரமளிப்பின் (women's empowerment) மீது உலகளாவிய விவாதத்தினை ஆழப்படுத்துவதற்காக இந்த உலகின் முதல் பெண் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் சந்திப்பு நடத்தப்படுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## கிராமங்களுக்குச் செல்லுதல் திட்டம்

- மணிப்பூர் மாநில முதலமைச்சர் N.பிரேன் சிங் (N. Biren Singh) மணிப்பூர் மாநிலத்தில் இம்பால் மேற்கு மாவட்டத்தில் உள்ள கோம்லாகோங் கிராமப் பஞ்சாயத்தில் "கிராமங்களுக்குச் செல்லுதல்" (Go to Village) என்னும் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்.
- இத்திட்டமானது மாநிலம் முழுவதும், மணிப்பூரின் மொத்தம் 60 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 60 கிராமங்களில் தொடங்கப்பட்டுள்ளது.
- அரசுத் திட்டங்களின் கீழ் பயன் பெறத் தகுதியான பயனாளிகளினை அடையாளம் காணவும், அவர்களை நேரடியாக சென்று அடைவதில் (reach out) அரசு அலுவலர்களின் நேரடி செயல் ஈடுபாட்டை (physical involvement) உறுதி செய்வதற்காகவும் மணிப்பூர் மாநிலத்தின் மாவட்டங்களில் அமைந்துள்ள வெவ்வேறு கிராமங்களை அரசு அதிகாரிகள் சென்று காணுவதற்கான தினமாக செவ்வாய் கிழமை தேர்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தப் புதிய திட்டத்தின் கீழ் அரசானது அரசுத் திட்டங்களின் கீழ் பயன்பெற தகுதியுடைய பயனாளிகளை (eligible and deserving beneficiaries) அடையாளம் காணும். மேலும் அவர்களின் வசிப்பிட அளவிலேயே அரசுச் சேவைகளை வழங்கும்.

## சிறந்த கிராம பஞ்சாயத்து - திகம்பர்பூர்

- மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தினால் (Ministry of Panchayati Raj) நாட்டின் சிறந்த கிராமப் பஞ்சாயத்தாக (best Gram Panchayat) கொல்கத்தாவிலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திகம்பர்பூர் (Digambarpur) கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மேற்கு வங்க மாநிலத்தின் தெற்கு 24 பர்கானா மாவட்டத்தில் (South 24 Parganas district) இந்த திகம்பர்பூர் கிராமப் பஞ்சாயத்து அமைந்துள்ளது.
- இந்த திகம்பர்பூர் கிராமப் பஞ்சாயத்தானது திகம்பர்பூர் சாரதா சங் பிரதமிக்

பஹுமுகி சமாபே சமிதி நிறுவனம் (Digambarpur Sarada Sangh Prathamik Bahumukhi Samabay Samity Ltd) எனும் கூட்டுறவுச் சங்கத்தினைக் கொண்டுள்ளது.

- இந்த கூட்டுறவுச் சங்கமானது காளான் சாகுபடி (mushroom cultivation) முதல் இயற்கை உரங்களின் உற்பத்தி (production of organic fertilisers) வரையென சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துகின்றது. மேலும் அவற்றிற்குச் சந்தை வாய்ப்பினையும் வழங்குகின்றது.

### துர்க் – பெரோஸ்பூர் – துர்க் அந்தோதயா எக்ஸ்பிரஸ்

- புதிய வாராந்திர (weekly) துர்க் பெரோஸ்பூர் – துர்க் அந்தோதயா எக்ஸ்பிரஸ் (Durg-Ferozpur-Durg Antyodaya Express) தென்கிழக்கு மத்திய இரயில்வே மண்டலத்தின் (South East Central Railway -SECR zone) கீழ் சத்திஸ்கர் மாநிலத்தில் அமைந்துள்ள ராய்ப்பூர் இரயில் நிலையத்தில் துவங்கப்பட்டுள்ளது.
- சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அனைத்து வசதிகளும் பொருந்திய பயணத்தை உறுதி செய்வதற்காக இந்த அந்தோதயா எக்ஸ்பிரஸ் (Antyodaya Express) தொடங்கப்பட்டுள்ளது.
- உயர் போக்குவரத்து அடர்த்தி உடைய இரயில் வழிப் பாதைகளில் (on high dense train traffic routes) சாதாரண குடிமக்களுக்கு முன்பதிவு இல்லாத (Antyodaya Express) மற்றும் அதிவேக இரயில் சேவை வழங்குவதற்காக அந்தோதயா எக்ஸ்பிரஸ் துவங்கப்பட்டுள்ளது.
- இந்த அந்தோதயா எக்ஸ்பிரஸ் அல்லாது, பிற இரு அந்தோதயா எக்ஸ்பிரஸ்களான, கொத்கத்தா – பிலாஸ்பூர் – புனே ஹம்சபர் எக்ஸ்பிரஸ் மற்றும் ஜபல்பூர் – பிலாஸ்பூர் – கல்கத்தா ஹம்சபர் எக்ஸ்பிரஸ் ஆகியவையும் விரைவில் செயல்பாட்டிற்கு வர உள்ளது.


## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### நாடாளுமன்றக் குழுக்களின் தலைவர்கள் நியமனம்

- 22 உறுப்பினர்களைக் கொண்ட பொது கணக்குக் குழுவின் (Public Accounts Committee-PAC) தலைவராக காங்கிரஸ் தலைவரான மல்லிகார்ஜீன் கார்கே (Mallikarjun Kharge) பொது கணக்குக் குழுவினுடைய புதிய பதவி காலத்திற்கு மீண்டும் மறுநியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மதிப்பீடுகள் மீதான நாடாளுமன்றக் குழுவின் (Parliamentary Committee on Estimates) தலைவராக முரளி மனோகர் ஜோஷியை மக்களவை சபாநாயகர் சுமித்ரா மஹாஜன் மறுநியமனம் செய்துள்ளார்.
- பொதுத்துறை நிறுவனங்கள் மீதான நாடாளுமன்றக் குழுவின் (Parliamentary Committee on Public Undertakings) தலைவராக சாந்தகுமாரை மக்களவை சபாநாயகர் சுமித்ரா மஹாஜன் மறுநியமனம் செய்துள்ளார்.

## 2018 ஆண்டின் பார்சூன் இதழினுடைய 50 சிறந்த தலைவர்கள்

- பார்சூன் இதழ் அண்மையில் உலகின் 50 சிறந்த தலைவர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- பார்சூன் இதழின் 50 சிறந்த தலைவர்கள் பட்டியல் வெளியீடானது இன்றைய சவால்களை சந்திக்க முற்படுகின்ற செயல்பாட்டாளர்கள், சிந்தனையாளர்கள், மற்றும் பேச்சாளர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.
- 2018 ஆண்டிற்கான பார்சூன் இதழின் 50 சிறந்த தலைவர்கள் பட்டியலில் இந்தியாவின் மனித உரிமை வழக்குரைஞரான இந்திரா ஜெய்சிங், ரிலையன்ஸ் நிறுவனத் தலைவர் முகேஷ் அம்பானி, கட்டிடவியல் கலைஞரான பால்கிருஷ்ண தோஷி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இப்பட்டியலில் இவர்கள் முறையே 20-வது, 24-வது மற்றும் 43-வது இடத்தில் உள்ளனர்.



## டிஜிட்டல் இணையமேடை மீதான சிறந்த கார்பரேட் சொசைட்டி

- 2018-ஆம் ஆண்டிற்கான வங்கியியல், நிதியியல் சேவைகளுக்கான, மற்றும் காப்பீட்டு தலைமைத்துவ விருதுகளில் {Banking, Financial services and Insurance (BFSI) leadership Awards 2018} டிஜிட்டல் இணையமேடை மீதான சிறந்த கூட்டுறவுச் சங்க விருதினை (Best Co-operative Society on digital platform) ஆதர்ஷ் கிரெடிட் நிறுவனம் (Adarsh Credit) வென்றுள்ளது.
- தன்னுடைய உறுப்பினர்களுக்குக் காகிதப் புழக்கமற்ற நிதியியல் சேவைகளை (paperless financial services) வழங்குவதற்காக மின் – கையெழுத்து (e-sign) வசதியை ஆதர்ஷ் கிரெடிட் நிறுவனம் செயல்படுத்தியுள்ளது.
- இத்தொடக்கமானது டிஜிட்டல் மயமாக்கலை மேலும் ஊக்குவிக்கும். மேலும் இது ரொக்கமல்லாத பொருளாதாரத்தை (cashless economy) நோக்கிய ஓர் முக்கிய அடியாகும்.
- மேலும் ஆதர்ஷ் கிரெடிட் நிறுவனமானது டிஜிட்டல் முறையில் நிதியியல் சேவைகளை மேற்கொள்ளும் இந்தியாவின் முதல் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கமாகும் (credit co-operative society).
- மேலும் இந்த 2018-ஆம் ஆண்டிற்கான BFSI தலைமைத்துவ விருதுகளை மேக்ஸ் குப்தா

சுகாதார காப்பீட்டு நிறுவனம், VMware, SREI மற்றும் தேசிய தகவல் மையம் (National Informatics Center) ஆகிய புகழ்பெற்ற நிறுவனங்களும் பெற்றுள்ளன.

## உலக ஹிந்து மாநாடு 2018

- கணிசமான அளவு இந்து மக்கள் தொகையைக் கொண்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள், இந்திய மாநிலங்களின் முதலமைச்சர்கள், முன்னணி கார்பரேட் நிறுவனத் தலைவர்கள் (top corporate honchos) மற்றும் மதத் தலைவர்கள் 2018 -ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிகாகோவில் நடைபெற உள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டில் (World Hindu Congress-WHC) கலந்துகொள்ள உள்ளனர்.
- 1893-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-ஆம் தேதி அமெரிக்காவின் சிகாகோவில் நடைபெற்ற முதல் உலக இந்து மாநாட்டில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையின் 125-வது வருடத்தை நினைவு கூர்வதற்காக 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 7 முதல் 9 ஆம் தேதி வரை இரண்டாவது உலக இந்து மாநாடு சிகாகோவில் நடைபெற உள்ளது.
- அமெரிக்க நாடாளுமன்றத்தின் (US Congress) முதல் இந்து சட்ட அவை உறுப்பினரான துளசி கப்பார்டு (Tulsi Gabbard) இந்த இரண்டாவது இந்து சிகாகோ மாநாட்டிற்குத் தலைவராவார்.
- உலக இந்து அறக்கட்டளை (World Hindu Foundation) இந்த மாநாட்டை ஒருங்கிணைக்கின்றது.

- - - - - - - - - - - - - - -